திருத்தணியில் முருகன் பாடல் பாடி தேர்தல் பிரசாரத்தை தொடங்கினார் சீமான்

திருத்தணி, மார்ச் 23: நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், திருத்தணியில் திங்கள்கிழமை முருகப் பெருமானின் பாடல் பாடி தேர்தல் பிரசாரத்தை தொடங்கினார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தனித்து களமிறங்கும் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், 234 தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை அண்மையில் அறிவித்தார்.

இதையடுத்து, அவர் தனது முதல் கட்ட பிரசாரத்தை திருத்தணியில் திங்கள்கிழமை தொடங்கினார். காலை 11.30 மணிக்கு திருத்தணிக்கு குடும்பத்தினருடன் வந்த சீமான், சரவணப்பொய்கை பகுதியில் 365 மலைப்படிகள் வழியாக வேலுடன் ஏறிச் சென்று முருகப் பெருமானை வழிபட்டார். தொடர்ந்து, மாலை 5 மணிக்கு திருத்தணி கமலா தியேட்டர் எதிரில் முருகப் பெருமானின் பக்திப் பாடலை பாடி பிரசாரத்தை தொடங்கினார். அப்போது சீமான் பேசியதாவது:

உலகுக்கேசோறுபோட்டஇனம், எல்லாவற்றையும் கற்றுக் கொடுத்த இனம் இன்று அரை கிலோ அரிசிக்கும், வேட்டிக்கும், சேலைக்கும், பணத்துக்கும் அல்லாடிக் கொண்டிருப்பதை பார்க்கும்போது ஒரு தன்மானமிக்க தமிழர்கள் எப்படி இதை சகித்துக் கொள்கிறார்கள்?.

அறிவை வளர்க்கும் ஆசிரிய பெருமக்கள் பாதையில் நின்று போராடுகிறார்கள். வேளாண் பெருமக்கள் விளைவித்த நெல்லை கொள்முதல் நிலையங்களில் வீண் டிக்கிறார்கள். வியர்வை சிந்தி விளைய வைத்தவன் கண்ணீர் சிந்தி கொண்டிருக்கிறான். போக்குவரத்துத் தொழிலாளர்கள் போராடுகிறார்கள். தொழிலாளர்கள் போராடுகிறார்கள், உயிரை காக்கும் மருத்துவர்கள் ஊதியம் கேட்டு போராடுகிறார்கள். செவிலியர்கள் வீதியில் நின்று போராடுகிறார்கள்.

துப்புரவுப் பணியாளர்களின் எல்லோருடைய போராட்டங்களிலும் நாங்கள் பங்கேற்றிருக்கிறோம். இத்தனைப் போராட்டங்களை தந்தவர்கள் தமிழகத்தில் நல்லாட்சி தந்து கொண்டிருப்பதாகக் கூறுகிறார்கள்.

தேர்தல் வருகிறபோது மகளிருக்கு ரூ. 5,000 கொடுக்கிறார்கள். இதன்மூலம் அவர்களின் வாக்கை உறுதி செய்கிறார்கள். இதுதான் நல்ல ஆட்சி முறையா?

கொடுக்கின்ற பணத்தை மிக அத்தியாவசிய பொருள்கள் மீது விலையை கடுமையாக ஏற்றி எடுப்பார்கள். தவிர்க்க முடியாத மின் கட்டண உயர்வு. இந்த ஆட்சியில் மட்டும் 3 முறை மின் கட்டணத்தை உயர்த்தி இருக்கிறார்கள். சொத்து வரி பத்திரப் பதிவுக்கு கணக்கில் லாத கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

உயிரைக் காக்கும் மருத்துவத்தில் தரம் இல்லை. தனியார் மருத்துவமனை கொடுக்கின்ற மருந்து தரம் எனில், 8 கோடி மக்களால் நிறுவப்பட்ட ஒரு அரசு தரமான மருந்தை வழங்கவில்லை என்றால் அங்கே அரசு தோற்றுப் போகிறது. இந்த தோல்வியுற்ற அரசைத்தான் தொடர்ந்து மக்களாகிய நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

நாம் தமிழர் கட்சியின் வெற்றி என்பது ஒரு கட்சியின் வெற்றி அல்ல; நாம் பிறந்த பெருமைமிக்க இனத்தின் வெற்றி என்பதை நீங்கள் எண்ண வேண்டும். ஆகவே, திருத்தணி தொகுதியில் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சந்திரனுக்கு விவசாயி சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்றார் சீமான்.

அதைத் தொடர்ந்து சோளிங்கர், ராணிப்பேட்டை பகுதிகளில் சீமான் பிரசாரம் மேற்கொண்டார்.

திருத்தணியில் திங்கள்கிழமை தேர்தல் பிரசாரத்தை தொடங்கிய நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான்.

திமுக வேட்பாளர் நேர்காணல் நிறைவு

சென்னை, மார்ச் 23: சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுக வேட்பாளர் நேர்காணல் திங்கள்கிழமை நிறைவுபெற்றது.

தமிழகம், புதுச்சேரியில் திமுக சார்பில் போட்டியிட விருப்பம் தெரிவித்தவர்களுக்கு சென்னை அண்ணா அறிவாலயத்தில் கடந்த 17-ஆம் தேதி முதல் திங்கள்கிழமை வரை நேர்காணல் நடைபெற்றது.

இதன் நிறைவு நாளான திங்கள்கிழமை காலை திருச்சி மண்டலத்துக்குள்பட்ட திருச்சி வடக்கு, திருச்சி மத்தி, திருச்சி தெற்கு, தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு, தஞ்சை மத்தி, பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களுக்கு நேர்காணல் நடைபெற்றது. மாலையில் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு, கடலூர் மேற்கு, மயிலாடுதுறை, நாகை, திருவாரூர் ஆகிய மாவட்ட வேட்பாளர்களுக்கு நேர்காணல் நடைபெற்றது.

திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் நேர்காணலை நடத்தினார். பொதுச்செயலர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலர் கே.என்.நேரு, அமைப்புச் செயலர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் உடன் இருந்தனர்.

திருச்சி மண்டலத்துக்குள்பட்ட தொகுதிகளுக்கான நேர்காணலில் அமைச்சர்கள் கே.என்.நேரு, எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன், அன்பில் மகேஸ், எஸ்.எஸ்.சிவசங்கர், கோவி.செழியன் உள்பட 700-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

புதுச்சேரியில் 'இண்டி' கூட்டணி தொகுதி ஒதுக்கீடு

காங்கிரஸ் – 16, திமுக – 14

புதுச்சேரி, மார்ச் 23: புதுச்சேரியில் வேட்பு மனு தாக்கல் நிறைவடைந்த பிறகு இண்டி கூட்டணியில் தொகுதிப் பங்கீடு உறுதியானது. மொத்தமுள்ள 30 தொகுதிகளில், காங்கிரஸுக்கு 16 தொகுதிகளும், திமுகவுக்கு 14 தொகுதிகளும் என ஒதுக்கீடு செய்யப்பட்டது.

திமுகவுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளிலிருந்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 1, விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு 1 தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளது.

திமுக மேலிடப் பொறுப்பாளர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி. இதனை செய்தியாளர்களிடம் திங்கள்கிழமை தெரிவித்தார். மேலும் அவர் கூறியதாவது: புதுச்சேரியில் காங்கிரஸ், திமுக , இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட், விசிக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், தேமுதிக உள்ளிட்ட கட்சிகளுடன் இணைந்து இண்டி கூட்டணியாக தேர்தலைச் சந்திக்கிறோம்.

இண்டி கூட்டணி வலிமையான கூட்டணி. தேர்தலில் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்றார் ஜெகத்ரட்சகன்.

வெ.வைத்திலிங்கம் உறுதி: புதுச்சேரி காங்கிரஸ் தலைவர் வெ. வைத்திலிங்கம் கூறுகையில், எங்கள் கூட்டணி சிறப்பான வெற்றியைப் பெறும் என்றார் வைத்திலிங்கம்.

காங்கிரஸ், திமுகவினர் போட்டிபோட்டு வேட்புமனு

புதுச்சேரி, மார்ச் 23: புதுச்சேரி பேரவைத் தேர்தலில் வேட்பாளர் பட்டியலை காங்கிரஸ், திமுக இதுவரை அறிவிக்கவில்லை. இதனால் இந்த இரு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் திங்கள்கிழமை விருப்பம்போல போட்டிபோட்டு வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர்.

புதுச்சேரியில் திமுக, காங்கிரஸ் கூட்டணிக்கு யார் தலைமை வகிப்பது என்பதில் பிரச்னை ஏற்பட்டது. ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு இந்த பிரச்னையில் தொகுதிப் பங்கீடு இறுதியானது. ஆனால், வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடவில்லை.

இந்நிலையில் வேட்புமனு தாக்கலுக்கு இறுதி நாளான திங்கள்கிழமை அனைத்துத் தொகுதிகளிலும் திமுக, காங்கிரஸ் வேட்பாளர்கள் தனித்தனியாக வேட்புமனு தாக்கல் செய்தனர். கட்சித் தலைமை வேட்பாளர்களை அறிவித்த பிறகு மற்ற வேட்பாளர்கள் மார்ச் 26-இல் வாபஸ் பெறுவது என்றும் முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள 30 பேரவைத் தொகுதிகளிலும் வேட்புமனு தாக்கல் செய்வதற்கு இறுதிநாளான திங்கள்கிழமை காங்கிரஸ், திமுக, பாஜக, உள்பட பல்வேறு கட்சியினர் உள்பட 380 பேர் வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர்.

ஆளுநர் ஆர்லேகருடன் தலைமைச் செயலர், டிஜிபி சந்திப்பு

சென்னை, மார்ச் 23: தமிழக புதிய ஆளுநர் ஆர்.வி. ஆர்லேகரை தமிழக அரசின் தலைமைச் செயலர், நா.முருகானந்தம் காவல் துறை தலைமை இயக்குநர் (பொ) ஜி. வெங்கடராமன் ஆகியோர் திங்கள்கிழமை ஆளுநர் மாளிகையில் சந்தித்துப் பேசினர்.

தமிழக ஆளுநராக இருந்த ஆர்.என்.ரவி, மேற்குவங்க ஆளுநராக நியமனம் செய்யப்பட்டதையடுத்து கேரள ஆளுநரான ஆர்.வி.ஆர்லேகர், கூடுதல் பொறுப்பாக தமிழக ஆளுநராக கடந்த மார்ச் 12- ஆம் தேதி பதவியேற்றார்.

அதன் பின்னர், ஆளுநர் ஆர்.வி. ஆர்லேகரை, முறைப்படி தலைமைச் செயலர், நா.முருகானந்தம் சென்னை ஆளுநர் மாளிகையில் திங்கள்கிழமை சந்தித்தார். அப்போது ஆளுநரின் செயலர் கிர்லோஷ் குமார் உடனிருந்தார்.

தொடர்ந்து, தமிழக காவல் துறை தலைமை இயக்குநர் (பொறுப்பு), ஜி. வெங்கடராமனும் ஆளுநர் ஆர்.வி. ஆர்லேகரை சந்தித்தார். இருவரும் மரியாதை நிமித்தமாக சந்தித்தாக ஆளுநர் மாளிகை வெளியிட்ட 'எக்ஸ்' தள பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொகுதிகள் எண்ணிக்கையை விட்டுக்கொடுக்கத் தயார்

சென்னை, மார்ச் 23: கூட்டணிக்காக தொகுதிகளின் எண்ணிக்கையை விட்டுக் கொடுக்க தேமுதிக தயார் என்று அக்கட்சியின் பொதுச் செயலர் பிரேமலதா விஜயகாந்த் கூறினார்.

தேமுதிக மாவட்டச் செயலர்கள் கூட்டம் பிரேமலதா விஜயகாந்த் தலைமையில் சென்னை கோயம்பேட்டில் திங்கள்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தொகுதிப் பங்கீடு, எந்தெந்த தொகுதிகளில் போட்டியிடுவது என்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

கூட்டத்துக்குப் பிறகு பிரேமலதா விஜயகாந்த் செய்தியாளர்களிடம் கூறியதாவது: திமுக கூட்டணியில் வெற்றி வாய்ப்பை அதிகரிக்க சில தொகுதிகளின் எண்ணிக்கையை விட்டுக் கொடுக்க வேண்டும் என்றால் கண்டிப்பாக தேமுதிக விட்டுக் கொடுக்கும்.

மற்றவர்கள் விட்டுக் கொடுக்கும்போது தேமுதிகவும் விட்டுக் கொடுப்பதில் மாற்றுக் கருத்து இல்லை. பேரவைத் தேர்தலில் கட்சி விசுவாசிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றார் அவர்.

புதுச்சேரி: தவெகவுடன் கூட்டணி சேர்ந்த கட்சிக்கு இரு தொகுதிகள்

சென்னை, மார்ச் 23: தமிழகத்தைப் போல புதுச்சேரியிலும் தனித்துப் போட்டியிடுவதாக அறிவித்த தவெக, தற்போது புதுச்சேரியில் கூட்டணி கட்சிக்கு இரண்டு தொகுதிகளை ஒதுக்கியுள்ளது.

புதுச்சேரியில் உள்ள 30 தொகுதிகளுக்கான தவெக வேட்பாளர்கள் பட்டியல் ஞாயிற்றுக்கிழமை இரவு வெளியிடப்பட்டது.

இந்நிலையில், இக் கட்சியின் பொதுச் செயலர் என்.ஆனந்த் திங்கள்கிழமை வெளியிட்ட அறிக்கையில், கூட்டணி கட்சியான ஜி.நேரு தலைமையிலான நேயம் மக்கள் கழகத்துக்கு 2 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இக் கட்சிக்கு உருளையன்பேட்டை மற்றும் தட்டாஞ்சாவடி ஆகிய இரு தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தவெக பொதுச் செயலர் தெரிவித்துள்ளார்.

Central Bank of India
சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
அண்ணாநகர் கிளை
AC-10, இரண்டாவது அவென்யூ, ரோடு, அண்ணாநகர், சென்னை-600 040 Ph: 044 2346 4304 / 4305
Email: bmchen2473@centralbank.co.in

SARFAESI சட்டம் 2002-ன் கீழ் இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) / 9(1)-ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை விற்பனை செய்தல்.

சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா-ல் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்தினை சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் அடையாளபூர்வமான சுவாதீனத்தில் எடுக்கப்பட்டு அந்த சொத்து 'உள்ள இடத்தில் உள்ளவாறு', "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" என்ற அடிப்படையில் கடன்தாரர்/ அடமானதாரரிடமிருந்து கடன் தொகை மற்றும் வட்டி, இதர செலவுகளை சேர்த்து வசூலிப்பதற்காக https://baanknet.com என்ற இணையதளம் வழியாக விற்பனை செய்யப்படும் என இதன்மூலம் பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன்தாரர்கள்: Mr.வெற்றிவேல், முகவரி 1: உரிமையாளர்: M/s பெரு எக்லிப், எண்.789, 30வது தெரு, TNHB, கொரட்டூர், சென்னை- 600080, முகவரி 2: எண். 4B, 1வது தெரு, பாலாஜி நகர், கொரட்டூர், சென்னை 76, ஜாமீன்தாரர்: Mr.சீனிவாசன் S/o M.சிவராமன், எண்.C1, வேதா அவின்யூ, வைகை தெரு விரிவு, துண்டல நகர், கொரட்டூர், சென்னை 600076

கோரிக்கை அறிவிப்பு தேதி: 24.07.2025 / கடன் நிலுவைத்தொகை: 23.07.2025 அன்றுள்ளபடி ₹ 2,24,31,807/-மற்றும் வட்டி, கட்டணங்கள் சுவாதீனம் அறிவிப்பு தேதி: 09.10.2025

அடமானத்தில் உள்ள சொத்து விவரம்

மத்திய சென்னை பதிவு மாவட்டம் மற்றும் விம்லிராக்கம் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட சர்வே எண்.267, பட்டா எண்.1524, Dis RPT 1991/1992, பட்டா படி புதிய சர்வே எண். 267/1A4, மனை எண்.4, பாலாஜி நகர், கொரட்டூர் கிராமம் என்னும் முகவரியிலுள்ள வொத்த பரப்பு 2400 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம், அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். அம்பத்தூர் டவுன்ஷிப் CMDA-க்கு வழங்கிய திட்டத்தின் மனையின் ஒரு பகுதி, அனுமதி எண். 784/97F1, தேதி 5.8.1997, மனையின் பகுதி எண். 31/97/F1 தேதி 5.8.1997, வடக்குப் பக்கம் 1200 சதுர அடி (மனை எண்.4B). எல்லைகள்: வடக்கு: 20 அடி ரோடு, தெற்கு: மனை எண்.4A (மனை 4-ன் மீதம்), கிழக்கு: மனை எண்.3, மேற்கு: மனை எண்.5. சொத்தானது Mr.சீனிவாசன் பெயரிலுள்ளது

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 1,40,00,000/- டேவணித்தொகை ₹ 14,00,000/-
ஏல உயர்வு தொகை ₹ 20,000/- சுவாதீனம் வகை: அடையாளபூர்வமான (Symbolic)
இ-ஏல தேதி / நேரம் 29.04.2026 காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
EMD சமர்ப்பிக்க கடைசி நாள்/நேரம்: 29.04.2026 மாலை 3.30 மணிக்குள்
சொத்தினை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்: 24.04.2026 காலை 10.00 மணி முதல் 4.00 மணி வரை

மேலும் விதிகள் மற்றும் நிபந்தனைகள் விபரத்திற்கு கீழ்கண்ட இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம், இ-ஏல சேவை வழங்குனர் இணையதள முகவரி: https://baanknet.com (அல்லது) வங்கியின் இணையதள முகவரி: https://www.centralbankofindia.co.in

சொத்துக்களை பார்வையிட மற்றும் இதர விவரங்களுக்கு, சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, அண்ணாநகர், சென்னை, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, Mr. Maneesh P Thankappan, முதன்மை மேனேஜர், Mob: 89399 75804 மற்றும் Mr.Ninbay Marandi, Mob: 62645 71389 அலுவலகு வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை தொடர்பு கொள்ளவும்.

SARFAESI சட்டம், 2002 விதி 8(6) / 9(1)-ன்கீழ் 30 நாள் கால அவகாச விற்பனை அறிவிப்பு
மேற்காணும் கடன்தாரர்கள்/அடமானதாரர்களுக்கும் இதன்மூலம் அறிவிப்பதாவது யாதெனில் மேற்காணும் கடன்பாக்கி மற்றும் இதர செலவுகளை இ-ஏலத்தேதிக்கு முன்னர் செலுத்தத் தவறினால் அந்த சொத்து ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு கடன் பாக்கி வசூலிக்கப்படும். பின்னர் பாக்கி ஏதேனும் இருந்தாலும் வட்டி மற்றும் இதர செலவுகளுக்கும் தங்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

இடம்: சென்னை
தேதி: 23.03.2026
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா

Auction Notice

Auction of unserviceable stores, obsolete items, and scrap materials of HQ Dakshin Bharat Area Officers' Mess will be conducted at the Mess premises on **28 March 2026 at 1000h**.

Interested bidders may inspect the items at the Officers Mess on any working day and obtain the detailed list of items from the Mess Office before the mentioned above date.

For queries
offrsmessdbarea@gmail.com
9791252650

Officers Mess
HQ Dakshin Bharat Area

ஞாயிற்றுக்கிழமைதோறும் தினமணி கதிர் இளமை! புதுமை! இனிமை!

Can Fin Homes Ltd (Sponsor: CANARA BANK)
கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெட்
கிளை : செங்குன்றம்
எண்.7, மாதவரம் நெடுஞ்சாலை, லஷ்மி அம்மன் கோயில் அருகில், செங்குன்றம், சென்னை-600 052.
போன்: 044-26322077, Cell:7625079195
CIN: L8511OKA1987PLCOO8699 மின்னஞ்சல்: redhills@canfinhomes.com

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை - IV-A (விதி 8(6)-ஐ பார்க்க)

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துக்களை சீரமைத்தல், கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 விதி 8 (6) -ன் கீழ் அசையா சொத்துக்களுக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள் மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கு அறிவிப்பது என்னவெனில் கடன்தாரர்களான திரு. ரமேஷ்.K, திரு.ராகவலு மற்றும் திருமதி. சர்வேஸ்வரி ஆகியோர்கள் கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெட்-க்கு செலுத்த வேண்டிய 23-03-2026 அன்று வரை உள்ள கடன் பாக்கி தொகையான ரூ.10,22,088/- (ரூபாய் பத்து லட்சத்து இருபத்து இரண்டாயிரத்து எண்பத்து எட்டு மட்டும்) மேலும் வட்டி மற்றும் அதற்குண்டான பிற கட்டணங்கள் சேர்த்து வசூலிப்பதற்காக அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிட்டுள்ள அசையா சொத்தினை கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெட், செங்குன்றம் கிளையின் அங்கீகாரம் பெற்ற அதிகாரி ஆக்கப்பூர்வ சுவாதீனம் எடுத்து அவற்றை "எங்கு உள்ளதோ அங்கு அப்படியே, எப்படி உள்ளதோ அப்படியே மற்றும் எப்படியிருந்தாலும் அப்படியே" என்ற அடிப்படையில் 28.04.2026 அன்று மின் ஏலம் மூலம் விற்கப்படும். குறைந்தப்பட்ச விலை: ரூ.33,80,000/- (ரூபாய் முப்பத்து மூன்று லட்சத்து எண்பதாயிரம் மட்டும்) மற்றும் முன் வைப்பு தொகை: ரூ.3,38,000/- (ரூபாய் மூன்று லட்சத்து முப்பத்து எட்டாயிரம் மட்டும்).

அசையா சொத்தின் விவரங்கள்:

மனை எண். 27, கிழக்கு பகுதி, சர்வே எண்.158/1A, DTCP எண்.243/1988, ஸ்ரீ பவானி நகர், எண்.87, வேப்பம்பட்டு கிராமம், திருவள்ளூர் மாவட்டம் - 602 024, நிலத்தின் மொத்தப்பரப்பளவு: 1011 சதுர அடி கட்டிடத்தின் பரப்பளவு : 850 சதுர அடி. வடக்கில்: 24 அடி அகல சாலை, கிழக்கில்: மனை எண்.28, மேற்கில்: மனை எண்.27 மேற்கு பகுதி, தெற்கில்: மனை எண்.18. தெரிந்த வில்லங்கம்: ஏதுவுமில்லை.

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெட்-ன் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் அளிக்கப்பட்டுள்ளது (https://www.canfinhomes.com/SearchAuction.aspx)- மின் ஏலத்தில் பங்கு பெறுபவர்களுக்கான இணைப்பு www.auctionbazaar.com-என்ற இணையதளத்தில் பார்வையிடவும்.

நாள்: 23.03.2026
இடம்: செங்குன்றம், சென்னை
ஒப்பம்/-
அதிகாரப்பூர்வ அதிகாரி
கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெட்

இந்தியன் வங்கி
மெட்ராஸ் ஜார்ஜ் டவுன் கிளை
321, (பழைய எண்.155), தம்பு செட்டி தெரு, சென்னை - 600 001. தொலைபேசி : 044-2534 1461, 2534 1481. மின்னஞ்சல் : mgt@indianbank.bank.in

சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துக்களுக்கு)

கீழே கையொப்பமிட்டுள்ள இந்தியன் வங்கி, மெட்ராஸ் ஜார்ஜ் டவுன் கிளையின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(12) வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க விதி 3-க்கு ஏற்ப கடன்தாரர்கள் : (1) M/s. சிராஜ் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ், (கடன்தாரர் & அடமானதாரர்), எண்.21A, 1வது அங்காளம்மன் கோயில் தெரு, நாகல்கேணி, குரோம்பேட்டை, சென்னை - 600 044, (2) பிரபின் K ராஜேந்திரன், (பங்குதாரர், ஜாமீன்தாரர் & அடமானதாரர்), எண்.59, S P அப்பார்ட்மெண்ட், F-2, 1வது தளம், ராமமூர்த்தி அவென்யூ, கோலப்பாக்கம், P O கோலூர், காஞ்சிபுரம், தமிழ்நாடு - 600 128, (3) பினிஷ் A, (பங்குதாரர், ஜாமீன்தாரர் & அடமானதாரர்), த/பெ அருள் ஃபிரான்சிஸ் ராஜேந்திரன், எண்.105 B, குமரன் குடில் 3வது மெயின் ரோடு, ராமமூர்த்தி அவென்யூ, கோலப்பாக்கம், P O மணப்பாக்கம், காஞ்சிபுரம், தமிழ்நாடு - 600 125, ஆகியோருக்கு 14.01.2026 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பு அனுப்பி அதில் குறிப்பிட்டுள்ளபடி செலுத்த வேண்டிய தொகையான ரூ.3,09,62,937/- (ரூபாய் மூன்று கோடியே ஒன்பது லட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து ஏழு மட்டும்) மேலும் 14.01.2026 தேதி முதல் திரும்ப செலுத்தும் தேதி வரை மேலதிக வட்டி, பிற கட்டணங்கள் மற்றும் செலவுகளுடன் சேர்த்து மேற்சொன்ன அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் தொகையை திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார்.

20.03.2026 தேதி வரை OCC & டெர்ம் கடன் வசதிக்காக உள்ள தற்போதைய நிலுவைத்தொகை ரூ.3,17,78,995/- (ரூபாய் மூன்று கோடியே பதினேழு லட்சத்து எழுபத்து எட்டாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஐந்து மட்டும்) அத்துடன் மேலதிக வட்டி செலவுகள் மற்றும் பிற கட்டணங்களும் சேரும்.

சம்பந்தப்பட்ட கடன்தாரர்கள் மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாக அறிவிக்கப்படுவது என்னவெனில் கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்துக்களை மேற்சொன்ன சட்டத்தின் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க விதி 8-க்கு இணங்கவும், 20 மார்ச் 2026 அன்று கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரி சுவாதீனம் எடுத்துக்கொண்டுள்ளார்.

கடன்தாரர்/அடமானதாரருக்கு குறிப்பாகவும் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக்கொண்ட இந்த சொத்து இந்தியன் வங்கிக்கு 20.03.2026 தேதி வரை செலுத்த வேண்டிய தொகையான ரூ.3,17,78,995/- (ரூபாய் மூன்று கோடியே பதினேழு லட்சத்து எழுபத்து எட்டாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஐந்து மட்டும்) மற்றும் 20.03.2026 தேதி முதல் திரும்ப செலுத்தும் தேதி வரை மேலதிக வட்டி, செலவுகள் மற்றும் பிற கட்டணங்களுடன் சேர்த்து பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித நடவடிக்கைகளும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக்கொள்ள கூடாது அப்படி வைத்துக்கொண்டால் அது இந்தியன் வங்கிக்கு செலுத்த வேண்டிய பிணைய தொகைக்கு உட்பட்டது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

"SARFAESIசட்டம் பிரிவு 13(8) ஷரத்துகளின் கீழ் அமைக்கப்பட்ட விதிகளின்படி சொத்துக்களை மீட்டுக்கொள்ள உங்களுக்கு உள்ள உரிமையை கவனத்தில் கொள்ளவும்".

அசையா சொத்தின் விவரம்

பிணையமாக அளிக்கப்பட்டுள்ள அடமான சொத்தின் முக்கிய விபரங்கள் பின்வருமாறு :

ஜட்டம் எண்.1 : பம்மல் கிராமம், "அண்ணா சாலை", "அங்காளம்மன் கோயில் தெரு", பல்லாவரம் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள 1410 சதுர அடி பரப்பளவு கொண்ட மனையின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும் அத்துடன் அதில் உள்ள RCC கட்டிடம், மின்சார சேவை இணைப்புடன் பாதுகாப்பு வைப்பு, கழிவறை, குளியலறை, செப்டிக் தொட்டி, மதில் சுவருடன் அனைத்து தேவையான பொருத்துதல்கள் உட்பட பழைய சர்வே எண்.190/5C1, வார்டு M, பிளாக் 1, டவுன் சர்வே நில எண்.69/0, பட்டாவின்படி சர்வே எண்.190/5C2A1 (P)-ல் அடங்கியுள்ளது. இது தாம்பரம் பதிவு மாவட்டம் மற்றும் பம்மல் துணை பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. இது M/s. சிராஜ் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் பெயரில் உள்ள பத்திரம் எண்.2570/2025. எல்லைகள் - வடக்கில் : மயான சமாதி, தெற்கில் : திரு. கண்ணாபிரம் மற்றும் சாண்டீ நிறுவனத்திற்கு சொந்தமான சொத்து, கிழக்கில் : அங்காளம்மன் கோயில் தெருவிலிருந்து இணைகிற திரு. M.G. டேவிஸ் சொத்து, மேற்கில் : திரு. ஜாக் பாப் அவர்களுக்கு சொந்தமான மனை.

ஜட்டம் எண்.2 : பம்மல் கிராமம், "அண்ணா சாலை", "அங்காளம்மன் கோயில் தெரு", பல்லாவரம் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள 4800 சதுர அடி பரப்பளவு கொண்ட மனையின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும் அத்துடன் அதில் உள்ள RCC கட்டிடம், மின்சார சேவை இணைப்புடன் பாதுகாப்பு வைப்பு, கழிவறை, குளியலறை, செப்டிக் தொட்டி, மதில் சுவருடன் அனைத்து தேவையான பொருத்துதல்கள் உட்பட. பழைய சர்வே எண்.190/5C1, பழைய பட்டா எண்.5349 மற்றும் பட்டாவின்படி சர்வே எண்.190/13, வார்டு M, பிளாக் 1, டவுன் சர்வே நில எண்.69/0, பட்டாவின்படி சர்வே எண்.190/5C2A1(P)-ல் அடங்கியுள்ளது. இது தாம்பர